ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# பறையூர் கூத்தச் சாக்கையன்

**முனைவர் சி. முடியரசன்**

உதவிப் பேராசிரியர்,

கணேசர் கலை அறிவியல் கல்லூரி,

மேலைச்சிவபுரி.

திறவுச் சொற்கள்:

ஐம்பெருங்காப்பியம், சிலப்பதிகாரம், சிலம்பு, கூத்து, சாக்கை கூத்து, கூத்தச் சாக்கையன்

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகிய மூன்று பொருண்மைகளையும் உள்ளடக்கிய பெருங்காப்பியமாக அமைந்ததால் முத்தமிழ்க் காப்பியம் என்று வழங்குவர். மேலும் இசைக்காப்பியம் என்றும் நாடகக்காப்பியம் என்றும் அழைப்பர். சிலப்பதிகாரத்தில் இசை, நாட்டியம், கூத்து ஆகியவற்றின் மரபார்ந்த செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன. இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தில் கலைகள் செழித்திருந்தன. இதனால் தான் படைத்த காப்பியத்தில் அவற்றை முறையாகப் பதிவு செய்துள்ளார். முத்தமிழும் சிறந்து விளங்கியதை இக்காப்பியம் உணர்த்துகிறது. இக்கட்டுரை

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற 'பறையூர் கூத்தச் சாக்கையன்' என்னும் பாத்திரத்தை ஆய்வு செய்கிறது.

**கூத்து – விளக்கம்**

கூத்து என்பது இசை, பாடல், ஆடல், நடிப்பு ஆகியவற்றின் கூட்டுத் தொகுதிச் செயல்பாட்டுக் கலை வடிவமாகும். கூத்து என்பதற்கு வசனம், பாட்டு, அடவுகள் போன்றவற்றைக் கொண்டு நடிக்கும் நாட்டார் கலை என்று ஆக்ஸ்போர்டு தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. இன்றளவும் தமிழ்நாட்டின் வடபகுதிகளில் 'தெருக்கூத்து' என்றும் தென்பகுதிகளில் 'தொம்பன் கூத்து' என்றும் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

கூத்து என்பது இன்றைய நாடக்ககலையின் தொன்மையான வடிவமாகும். இன்று இசை நாடகம், மேடை நாடகம், நாட்டிய நாடகம் என்ற வகைகள் உள்ளதைப் போல் கூத்தும் பல வகைகளாக இருந்துள்ளது. சங்க காலத்தில் குறவைக்கூத்து, துணங்கைக் கூத்து, கருங்கூத்து ஆகியவை வழக்கில் இருந்துள்ளன. சிலப்பதிகாரத்திலும் பதினோருவகைக் கூத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல்லாடல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்பன அவையாம்.

**கூத்து என்னும் சொல்லாட்சி**

கூத்து என்ற சொல்லை முன்னோட்டமாக அமைந்த சொற்கள் ஏராளம். அவை கூத்து, நடிப்பு, இசை, கலைத் தொடர்புடையனவாகவே உள்ளன.

- அரண்மனையைச் சார்ந்த நாடக அரங்கு கூத்தப்பள்ளி எனப்படுகிறது.
- நாடக்கலைஞர் – கூத்தர் எனப்படுவர்.
- நடிப்பதைக் கூத்தாட்டு என்பர்.

- நடனமாடுதலைக் கூத்தாடுதல் என வழங்குவர்.
- நாடகக் கணிகையரைக் கூத்தி என்பர். இன்று பரத்தமை உடைய பெண்களைக் கூத்தியர் என்பர்.
- நாடகக் கலையில் சிறந்து விளங்குபவன் கூத்தாள்பவன் எனப்படுவான்.
- இறைவனை கூத்தன் என்பர்.

இவ்வாறாக இசை, நாட்டியம், நாடகம் இவற்றோடு தொடர்புடையதாகவே கூத்து என்ற சொல் அமைந்துள்ளது.

**சாக்கைக் கூத்து**

புராணக்கதைக் கூறுகளைக் கொண்டு நிகழ்த்தப்பெறுவது சாக்கைக் கூத்தாகும். சாக்கையர் என்ற இனத்தினர் இக்கலையை நிகழ்த்தி வருவர். கூத்தம்பலம் என்ற இடத்தில் சாக்கைக் கூத்து நடைபெறும். புராணக் கதைகளைக் கூறுவதும் நடிப்பதுமே சாக்கையர் தொழில் கதையோட்டத்தில் பல்வேறு கிளைக்கதைகள் வெளிப்படும். கதை சொல்லும் முறையிலும், நகைச்சுவை நடிப்பிலும் சாக்கையர்கள் தன்னிகரற்று விளங்குவர்.

**கூத்தச் சாக்கையன்**

சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டத்தில் கோவலன் கண்ணகி மறைவுக்குப் பின்னர் சேர மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில்கட்ட எண்ணுகிறான். இமயம் சென்று ஆரிய அரசரை வென்று பத்தினியின் உருவம் செய்ய கல் கொண்டு வந்தான். போராட்டத்தில் வெற்றியைக் கொண்டாடவும், களைப்பைப் போக்கவும் கூத்தச் சாக்கையன் வரவழைக்கப்பட்டான். சிவபெருமான் ஆடிய கொடு கொட்டிச் கேதம் என்ற கூத்தை சாக்கையன் ஆடிக் காட்டினான்.

கூத்தச் சாக்கையனின் உருவம் வலது புறம் ஆண் உருவத்திலும் இடப்பக்கம் பெண் உருவத்திலும் ஒப்பனை செய்யப்பட்டிருந்தது.

**திருநிலைச் சேவடிச் சிலம்புவாய்ப் புலம்பவும்**

**பரிதரு செங்கையில் படுபறையார்ப்பவுஞ்**

**செங்கணாயிரந் திருக்குறிப் பருளவுஞ்**

**செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்**

**பாடகம் பதையாது சூடகம் துளங்காது**

**மேகலை பொழியாது மென்முலை யசையாது**

**வார்குழை யாடாது மணிக்குழ லவிழா**

**துமையவளொருதிறனாக வோங்கிய**

**விமையவ னாடிய கொட்டிச் சேதம். (சிலம்பு. நடுகற்காதை. 67 - 75)**

இப்பாடலில் சாக்கைக் கூத்தாடிய சாக்கையரின் நிலையை விளக்கி யமைந்துள்ளது. அவன் ஆடிய போது சிலம்பு வாய் புலம்பியது. கையில் இருந்த பறை ஆர்த்தது. கண்கள் சிவந்து மனக் குறிப்பினை உணர்த்தின. அவனுடைய சிவந்த சடை நான்கு திசைகளிலும் பரவி ஆடின. ஆனால் இடப்பாகம் இருந்த பெண்ணுருவில் பாடகம் அசையவில்லை சூடகம் துளங்கவில்லை இடையில் உள்ள மேகலை ஒலிக்கவில்லை. மென்மையான மார்பகம் அசையவில்லை. காதில் அணிந்துள்ள குழை ஆடவில்லை. இடதுபுறம் அமைந்த கூந்தலும் அவிழவில்லை. திரிபுரத்தை எரித்த பின்னர் சிவபிரான் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தை கூத்தச் சாக்கையன் ஆடுகின்றான்.

**பறையூர்**

கூத்தச் சாக்கையன் பறையூர் என்ற ஊரினன். அவ்வூர் கற்றறிந்தோர் எனச் சொல்லப்படும் நான்மறையோரும் நிறைந்த ஊராகும்.

**பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்**

**கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்தவன்**

**ஏத்தி நீங்க இருநிலம் ஆள்வோன்**

**வேத்தியன் மண்டபம் மேவிய பின்னர் (சிலம்பு. நடுகற்காதை. 76 - 79)**

எனச் சிலம்பு கூறுவதில் இருந்து கூத்தச் சாக்கையன் பறையூர் என்பது தெளிவாகிறது. செங்குட்டுவன் வஞ்சி வந்தடைந்தவுடன் சொல்லி அனுப்புகிறான். அந்த நாளில் உடனடியாக வந்து ஆடியதால் வஞ்சி மாநகருக்கு அருகிலேயே அவ்வூர் இருந்திருக்க வேண்டும்.

**நிகழ்த்து நிலையில் சாக்கையர் கூத்து**

கேரளத்தில் கூத்தம்பலம் என்னும் இடத்தில் சாக்கையன் முக்காலி மீது அமர்ந்து ஆடை ஒப்பனை வினோதமாக அமைந்திருக்கும். எண்ணற்ற மடிப்புகளுடன் காணக் கவரும் தோற்றப் பொலிவைப் பெற்றிருக்கும். சாக்கையனுக்குப் பின்புறம் நம்பியார் நிற்க அதனைத் தொடர்ந்து மிளவு (முழவு) எனும் இசைக்கருவி வைக்கப்பட்டிருக்கும். கூத்தின் தொடக்கமும் நிறைவும் சமக்கிருதப் பாடல் இடம்பெறும்.

இடையிலேயே முழவு வாசிக்கப்படும். நம்பியார் இனத்தைச் சேர்ந்த நங்கையர் என்னும் பெண் தாளக்கருவியைக் கையில் ஏந்தியிருப்பாள். தேவையான நேரத்தில் மட்டுமே தாளத்தை

இசைப்பாள். ஏனைய நேரம் பேசாது சிலைபோல அமர்ந்திருப்பாள். சிறுபுன்னகை அவளிடம் வெளிப்பட்டால் உடனடியாக கூத்து நிறுத்தப்படும்.

**சமுதாயப் பின்னணி**

சாக்கையர் என்ற இனம் தமிழ்நாடில் இல்லை. சேரநாடு எனத்தற்போது வழங்கப்படும் கேரள நாட்டில் வாழும் ஒரு பிரிவினர் இவர்களாவர். அவர்கள் கோவில் பணிகள் மட்டும் செய்யும் 'அம்பலவாசிகள்' எனப்படுகின்றனர். நம்பியாளன், புஷ்பகன் (பூப்பள்ளி), சாக்கியர், பிராமணி (அ) தெய்வம்படி, அடிகள், நம்பியார், பிஷாரடி, வாரியார், நாட்டுப்பட்டன், தீயாடுண்ணி, குருக்கள், பொதுவான் ஆகிய பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

இவர்களில் அடிகள், நம்பியார், புஷ்பகன், தீயாட்டு நம்பியார் ஆகியோர் பூணூல் அணிபவர்கள் பிறர் பூணூல் அணியாதவர். இங்கு உயர் வகுப்பார் எனக் கூறப்படும் பெண்ணுக்கும் தாழ்ந்த வகுப்பார் எனக் கூறப்படும் ஆணுக்கும் பிறந்தவர்கள் 'பிறதிலோமர்' எனப்படுவர். தாழ்ந்த வகுப்புப் பெண்ணுக்கும் உயர்ந்த வகுப்பு ஆணுக்கும் பிறந்தோர் 'அநுலோமர்' எனப்படுவர். இவ்விரு வகையாலும் வந்தவர்களே சாக்கையர்களாவர்.

**திருமணமுறை**

சாக்கையரும் சாக்கை நம்பியாரும் ஓரினத்தவர் எனினும் சாக்கையர் பூணூல் அணிவர். சாக்கைய நம்பியார் பூணூல் அணிவது இல்லை. சாக்கைய நம்பியார் இனப் பெண்களே நங்கையர் ஆவர். சாக்கையர் இனத்து ஆடவர் நங்கையரை மணப்பர். ஆனால் சாக்கைய நம்பியார் சாக்கையர் பெண்களை மணப்பது வழக்கமில்லை. இவ்வாறு பல நிலைகளில் இவர்களது பண்பாடு அமைந்துள்ளது.

**சாக்கைக்காணி-கூத்தக்காணி**

முதலாம் இராசராசனது ஒன்பதாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு திருக்கோயிலில் திருமூலநாயனார் நாடகமும் ஆரியக் கூத்து ஆடுவதற்காக குமரன் ஸ்ரீ கண்டன் என்பவர்க்கு நிலம் வழங்கப்பட்ட செய்தியைக் கொண்டமைந்துள்ளது. இதனை சாக்கைக்காணி உடையவன் என்று பதிவு செய்துள்ளது.

முதல் குலோத்துங்க சோழனின் 18 ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தில் மிழலை நாட்டு வீரநாராயணபுரத்தில் கைலாசமுடைய மகாதேவர் கோயிலில் சித்திரைத் திருவிழாவில் 5 முறை தமிழ்க் கூத்து நிகழ்த்திய விக்ரமாதித்தன் திருமுதுகுன்றன் ஆன விருதராச பயங்கர

ஆசார்யன் நாகன்பாடியில் நகரத்தாரும் கோயிலாரும் நிலம் அளித்த செய்தி இடம்பெறுகிறது. இது கூத்தக்காணி என வழங்கப்படுகிறது. கூத்துக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் நிலம் கூத்தக்காணி எனவும் சாக்கைக்காணி எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

**நிறைவாக**

- சிலப்பதிகாரம் நாடகம், கூத்து ஆகியவற்றை மரபுகளோடு சிதையாமல் பதிவு செய்துள்ளது.
- கூத்து என்பது நடித்தல், குதித்தாடுதல் என்னும் பொருளை உணர்த்துகின்றன.
- சாக்கைக் கூத்து என்பது சாக்கையர் ஆடும் கூத்தாகும்.
- கூத்தச் சாக்கையன் என்பவன் ஆடல்கலையை அபிநயங்களுடன் துல்லியமாக ஆடும் கலை நுட்பன். கொடுகொட்டிச் சேதம் எனும் ஆடலை சேரமான் செங்குட்டுவன் முன் ஆடுகிறான். நடன அசைவு முகபாவனை, பிறரைக் கவரும் ஆற்றல் ஆகியவற்றில் தேர்ந்த கலைஞனாதலால் அனைவரது பாராட்டையும் பெறுகிறான்.
- இவனது ஊர் பறையூர் என்பதாகும்.

- இன்றளவில் 1700 ஆண்டுகளுக்குப் பிறகும் மரபு சார்ந்த சாக்கையர் கூத்து கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சாக்கையர் நிகழ்த்தி வருகின்றனர்.

**சான்றாதாரங்கள்**


1. சிவபாத சுந்தரனார். நா, கண்ணகி கற்பு, ஸ்ரீ காந்தா வெளியீடு, 1955.
2. ம. பொ. சி, இலக்கியத்தின் எதிரிகள், இன்ப நிலையம், சென்னை,1955.
3. வெள்ளைச்சாமி பாரதி, சிலப்பதிகாரம் சாற்றும் பெண்ணிய இல்லறக் கடமைகள், தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், 2015.
4. வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ராமையா பதிப்பகம், 2016.
5. வேலம். க. ந. ,கண்ணகி சிந்தாத கண்ணீர், தமிழ் இசை மன்றம்,2003.